# நோயெதிர்ப்பு குறைபாடுள்ளவர்களுக்கான COVID-19 தடுப்பூசி வழிமுறைக் கையேடு

நோயெதிர்ப்பு குறைபாடுள்ளவர்கள் குறிப்பாக COVID-19 உள்ளிட்ட தொற்றுநோய்களால் பாதிக்கப்படுகின்றனர். *பின்வரும் மருத்துவ நிலைகளில் ஏதேனும் உங்களுக்கு இருந்தால், நீங்கள் மிதமானது முதல் கடுமையான நோயெதிர்ப்பு குறைபாடுடையவராகக் கருதப்படுவீர்கள், மேலும் COVID-19 தடுப்பூசியின் கூடுதல் டோஸைப் பெற்று பயனடையலாம்.* **இதில் உள்ளடங்கும் நபர்கள்:**

- கட்டிகள் அல்லது இரத்தப் புற்றுநோய்களுக்கான புற்றுநோய் சிகிச்சையைப் பெறுபவர்.
- உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பெற்ற மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தின் சக்தியை கட்டுப்படுத்த மருந்து எடுத்துக்கொள்பவர்
- கடந்த 2 ஆண்டுகளில் ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை பெற்றவர் அல்லது நோய் எதிர்ப்பு சக்தியை கட்டுப்படுத்த மருந்து எடுத்துக்கொள்பவர்
- மிதமான அல்லது கடுமையான நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு (DiGeorge நோய்க்குறி, Wiskott-Aldrich நோய்க்குறி போன்றவை)
- தீவிர அல்லது சிகிச்சையளிக்கப்படாத HIV தொற்று
- அதிக அளவு கார்டிகோஸ்டீராய்டுகள் அல்லது நோயெதிர்ப்பு சக்தியை அடக்கும் பிற மருந்துகளுடன் சிகிச்சை பெறுபவர்.

இந்தப் பட்டியலில் அனைத்து நோயெதிர்ப்பு குறைபாடுள்ள மருத்துவநிலைகளைப் பற்றியும் குறிப்பிடவில்லை, கூடுதல் டோஸ்களை நீங்கள் பெற்றுக்கொள்வது பயனுள்ளதாக இருக்குமா என்பதைத் தீர்மானிக்க உங்கள் மருத்துவ வழங்குநரிடம் கலந்துரையாடவும். நீங்கள் நோயெதிர்ப்பு குறைபாடுள்ளவராக இருந்தால், COVID-19 தொற்றுக்கு எதிராகப் பாதுகாப்பாக இருக்க, நீங்கள் எத்தனை டோஸ்களைப் பெறத் தகுதியுடையவர்கள் என்பதைக் கண்டறிய கீழேயுள்ள விளக்கப்படத்தைக் காணவும்:

| நீங்கள் பின்வரும் டோஸ்களைப் பெற்றிருந்தால்... | வயது குழு | முதன்மைத் தொடர்கள் | நான் கூடுதல் மோனோவேலண்ட் டோஸைப் பெற வேண்டுமா? | நான் பூஸ்டர் டோஸைப் பெறலாமா? |
|---|---|---|---|---|
| *Moderna* | 6 மாதங்கள் முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு | 28 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ்கள் செலுத்தப்படும் | ஆம், உங்கள் 2 ஆவது டோஸுக்கு பின் குறைந்தது 28 நாட்களுக்குப் பிறகு கூடுதல் டோஸைப் பெற வேண்டும். | ஆம், 6 மாதங்கள் முதல் 4 வயது வரையிலான குழந்தைகள், அவர்களின் முதன்மைத் தொடரில் பெற்ற அதே பிராண்டின் புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் டோஸைப் பெற வேண்டும். |
| | 5 வயது | 28 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ்கள் செலுத்தப்படும் | ஆம், உங்கள் 2 ஆவது டோஸுக்கு பின் குறைந்தது 28 நாட்களுக்குப் பிறகு கூடுதல் டோஸைப் பெற வேண்டும். | ஆம், 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் Pfizer அல்லது Moderna தடுப்பூசியின் புதுப்பிக்கப்பட்ட இருவேலண்ட் பூஸ்டர் டோஸைப் பெற வேண்டும். |
| | 6+ வயது | 28 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ்கள் செலுத்தப்படும் | ஆம், உங்கள் 2 ஆவது டோஸுக்கு பின் குறைந்தது 28 நாட்களுக்குப் பிறகு கூடுதல் டோஸைப் பெற வேண்டும். | ஆம், 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு கடைசி டோஸ் நிறைவுசெய்த 2 மாதங்களுக்குப் பிறகு, ஒரு புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் Pfizer அல்லது Moderna mRNA பூஸ்டர் டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது.<br>முந்தைய பூஸ்டரைப் பெறாத 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள், புதுப்பிக்கப்பட்ட mRNA பூஸ்டரைப் பெற முடியாவிட்டால் அல்லது பெறாவிட்டால், தங்கள் முதன்மைத் தொடரை நிறைவுசெய்த 6 மாதங்களுக்குப் பிறகு Novavax பூஸ்டரைப் பெறுவதை தேர்வு செய்யலாம். |
| *Pfizer* | 6 மாதங்கள் முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு | **3 டோஸ்கள்:** முதல் 2 டோஸ்கள் 21 நாட்கள் இடைவெளியில் கொடுக்கப்படுகின்றன; 3 ஆம் டோஸ் 8 வாரங்களுக்குப் பிறகு கொடுக்கப்படுகிறது. | இந்த நேரத்தில் கூடுதல் முதன்மை டோஸைப் பெறக்கூடாது. | இல்லை, Pfizer முதன்மைத் தொடரை ஏற்கனவே நிறைவுசெய்த 6 மாதங்கள் முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, தற்சமயம் புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் டோஸ் அங்கீகரிக்கப்படவில்லை. |
| | 5 வயது | 21 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ்கள் செலுத்தப்படும் | ஆம், உங்கள் 2 ஆவது டோஸுக்கு பின் குறைந்தது 28 நாட்களுக்குப் பிறகு கூடுதல் டோஸைப் பெற வேண்டும். | ஆம், Pfizer ஐப் பெற்ற 5 வயது குழந்தைகள் புதுப்பிக்கப்பட்ட Pfizer பைவேலண்ட் பூஸ்டரை மட்டுமே பெறலாம். |
| | 6+ வயது | 21 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ்கள் செலுத்தப்படும் | ஆம், உங்கள் 2 ஆவது டோஸுக்கு பின் குறைந்தது 28 நாட்களுக்குப் பிறகு கூடுதல் டோஸைப் பெற வேண்டும். | ஆம், 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு கடைசி டோஸ் நிறைவுசெய்த 2 மாதங்களுக்குப் பிறகு, ஒரு புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் Pfizer அல்லது Moderna mRNA பூஸ்டர் டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது.<br>முந்தைய பூஸ்டரைப் பெறாத 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள், புதுப்பிக்கப்பட்ட mRNA பூஸ்டரைப் பெற முடியாவிட்டால் அல்லது பெறாவிட்டால், தங்கள் முதன்மைத் தொடரை நிறைவுசெய்த 6 மாதங்களுக்குப் பிறகு Novavax பூஸ்டரைப் பெறுவதை தேர்வு செய்யலாம். |
| *Johnson & Johnson* | 18+ வயது | ஒரு டோஸ் | ஆம், J&J இன் 1 ஆவது டோஸைப் பெற்ற 28 நாட்களுக்குப் பிறகு, mRNA தடுப்பூசியின் ஒரு கூடுதல் டோஸை நீங்கள் பெற வேண்டும். | ஆம், கடைசி டோஸ் நிறைவுசெய்த 2 மாதங்களுக்குப் பிறகு, ஒரு புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் Pfizer அல்லது Moderna mRNA பூஸ்டர் டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது.<br>முந்தைய பூஸ்டரைப் பெறாத 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள், புதுப்பிக்கப்பட்ட mRNA பூஸ்டரைப் பெற முடியாவிட்டால் அல்லது பெறாவிட்டால், தங்கள் முதன்மைத் தொடரை நிறைவுசெய்த 6 மாதங்களுக்குப் பிறகு Novavax பூஸ்டரைப் பெறுவதை தேர்வு செய்யலாம். |
| *Novavax* | 12+ வயது | 21 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ்கள் செலுத்தப்படும் | இந்த நேரத்தில் கூடுதல் முதன்மை டோஸைப் பெறக்கூடாது. | ஆம், 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு கடைசி டோஸ் நிறைவுசெய்த 2 மாதங்களுக்குப் பிறகு, ஒரு புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் Pfizer அல்லது Moderna mRNA பூஸ்டர் டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது.<br>முந்தைய பூஸ்டரைப் பெறாத 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள், புதுப்பிக்கப்பட்ட mRNA பூஸ்டரைப் பெற முடியாவிட்டால் அல்லது பெறாவிட்டால், தங்கள் முதன்மைத் தொடரை நிறைவுசெய்த 6 மாதங்களுக்குப் பிறகு Novavax பூஸ்டரைப் பெறுவதை தேர்வு செய்யலாம். |

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### கூடுதல் தடுப்பூசி டோஸுக்கும் பூஸ்டர் தடுப்பூசி டோஸுக்கும் என்ன வித்தியாசம்?

ஒரு முதன்மை தடுப்பூசி தொடரை நிறைவுசெய்த ஆனால் போதுமான வலுவான நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத சில நோயாளிகளுக்கு (மேலே உள்ள அட்டவணைப் பார்க்கவும்) கூடுதல் டோஸ் தேவை.

ஆரம்ப தடுப்பூசித் தொடருக்குப் பிறகு காலப்போக்கில் குறைந்துவிட்ட பாதுகாப்பு மற்றும்/அல்லது நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த அல்லது மீட்டெடுக்க ஒரு பூஸ்டர் டோஸ் வழங்கப்படுகிறது.

### என்னென்ன உடல்நலப் பிரச்சனைகள், உங்களுக்கு COVID-19 தொற்றின் மூலம் ஏற்படும் கடுமையான நோய்க்கான அதிக ஆபத்தை உருவாக்குகின்றன?

கீழே பட்டியலிடப்பட்டுள்ள உடல்நலப் பிரச்சனைகளைக் கொண்ட எந்த வயதினரும் COVID-19 ஆல் கடுமையாக நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

நீங்கள் வயதானவராக இருந்தாலோ அல்லது இந்தப் பட்டியலில் உள்ளவை உட்பட, வேறுபல கடுமையான உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவராக இருந்தாலோ COVID-19 தடுப்பூசிகள் (ஆரம்ப டோஸ்கள் மற்றும் பூஸ்டர்கள்) மற்றும் COVID-19 க்கான பிற தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் முக்கியம். COVID-19 நோயினால் கடுமையான நோய்பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ள அனைத்து சாத்தியமான உடல்நல பிரச்சனைகளையும் இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை. உங்களுக்கு இங்கு சொல்லப்படாத உடல்நல பிரச்சனைகள் இருந்தால், அதை எவ்வாறு சிறப்பாக கையாள்வது மற்றும் COVID-19 இலிருந்து எவ்வாறு உங்களைப் பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்து உங்களது உடல்நலப் பாதுகாப்பு வழங்குநரிடம் பேசுங்கள்.

- புற்றுநோய்
- நாள்பட்ட சிறுநீரக நோய்
- நாள்பட்ட கல்லீரல் நோய்
- நாள்பட்ட நுரையீரல் நோய்கள்
- டிமென்ஷியா அல்லது பிற நரம்பியல் பிரச்சனைகள்
- நீரிழிவு நோய் (வகை 1 அல்லது 2)
- டவுன் சிண்ட்ரோம்
- இதய நோய்கள்
- HIV தொற்று
- நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நிலை (பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு)
- மனநல பிரச்சனைகள்
- அதிக எடை மற்றும் உடல் பருமன்
- கர்ப்பம்
- வளைந்த உயிரணு அல்லது இரத்த அழிவுச் சோகை (தலசீமியா)
- புகைபிடித்தல், தற்போதைய அல்லது முந்தையது
- திட உறுப்பு அல்லது இரத்த ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை
- பக்கவாதம் அல்லது செரிப்ரோவாஸ்குலர் நோய், இது மூளைக்கு இரத்த ஓட்டத்தை பாதிக்கிறது
- பொருள் பயன்பாட்டு கோளாறுகள்
- காசநோய்

### புதுப்பிக்கப்பட்ட/பைவேலண்ட் பூஸ்டர் என்றால் என்ன?

புதுப்பிக்கப்பட்ட/பைவேலண்ட் COVID-19 பூஸ்டர் என்பது ஒரு தடுப்பூசி கலவையாகும், இநத இரண்டும் அசல் கொரோனா வைரஸ் திரிபுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, தற்போதைய பெரும்பாலான நிகழ்வுகளுக்குக் காரணமான புதிய வகை திரிபுகளிலிருந்து பாதுகாக்கிறது. புதுப்பிக்கப்பட்ட பூஸ்டர்கள் வைரஸுக்கு எதிராக உகந்த பாதுகாப்பை வழங்குவதோடு, காலப்போக்கில் குறைந்து வரும் தடுப்பூசியின் செயல்திறனை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

### மிதமான அல்லது கடுமையான நோயெதிர்ப்பு குறைபாடுள்ளவர்கள் இந்த டோஸ்களைப் பெற மருத்துவரின் குறிப்பு/மருந்துச் சீட்டு அல்லது பிற ஆவணங்கள் தேவைப்படுமா?

இல்லை, தடுப்பூசிகள் வழங்கப்படும் அனைத்து இடங்களிலும் தனிநபர்கள் தங்களது சுய அடையாளத்தைக் காண்பித்து அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் செலுத்திக் கொள்ளலாம். இவ்வளவு மக்கள்தொகையும் தடுப்பூசியை அணுக கூடுதல் தடைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த இது உதவும். நோயெதிர்ப்புக் குறைபாடுள்ள நபர்களுக்கு அவர்களின் குறிப்பிட்ட மருத்துவ நிலை குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், கூடுதல் டோஸ் எடுப்பது அவர்களுக்குப் பொருந்துமா என்பதைப் பற்றி தங்கள் சுகாதார வழங்குநரிடம் கலந்தாலோசிக்கலாம்.

### COVID-19 தொற்றுக்கான தடுப்பு மருந்தை எடுத்துக்கொண்டாலும், மேலும் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமா? (ஆங்கிலத்தில்)

ஆம், நீங்கள் தடுப்பூசி செலுத்தியிருந்தாலும், பொது இடங்களில் உள்ள உட்புற அமைப்புகளில் முகக்கவசம் அணிய வேண்டியிருக்கும். கூடுதல் தகவல்களுக்கு, எங்களின் *முக கவசங்கள் மற்றும் முகமூடிகள் குறித்த FAQ பக்கத்தைக்* (ஆங்கிலத்தில்) காணவும். உங்கள் கைகளை அடிக்கடி கழுவவும், 6 அடி (2 மீட்டர்) இடைவெளியைக் கடைபிடிக்கவும், கூட்டமான சந்திப்புகளைக் கட்டுப்படுத்தவும் பரிந்துரைக்கிறோம்.

COVID-19 தடுப்பூசிகள் சிறப்பாக வேலை செய்கின்றன, ஆனால் அவை 100% பயனுள்ளதாக இருப்பதில்லை. தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தாலும் சிலருக்கு COVID-19 வரலாம். பரவக்கூடிய வைரஸ் திரிபுகள் அதிகரித்து வரும் இந்த சூழ்நிலையில், வைரஸ் பரவுவதைக் குறைக்க அனைத்து மக்களும் முகக் கவசம் அணிவது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

**மேலும் கேள்விகள் உள்ளதா? இங்கே செல்லவும்: *doh.wa.gov/covidbooster***

Washington State Department of Health

DOH 825-064 December 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.